DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No.476 / 2019
Deposition of PW2/ LW5

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சுரேஷ் |
| Father's / Husband Name | : | ராமசாமி |
| Village | : | நாச்சியார்புரம் |
| Taluk | : | ஆண்டிபட்டி |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | இந்து |
| Age | : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21.07.2025.

எதிரிகள் ஆஜர் .

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி ஆகியவற்றில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி ஆகியவற்றில் **உள்ள 1 வது கையொப்பம் முறையே அ.சா.ஆ.2 மற்றும் அ.சாஆ–3.** நான் 3 வருடங்களுக்கு முன்பு மாதம் தேதி நினைவில் இல்லை காவல் நிலையம் சென்ற போது போலீசார் என்னிடம் வாங்கினார்கள். எதற்காக கையொப்பம் செய்தேன் என்று நினைவில் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசுத் தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து நீதிமன்ற அனுமதிக் கோரப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடந்த 04.10.2019 ம் தேதி 11.00 மணியளவில் வேகவதி ஆசிரமம் சாலை வெள்ளத்தேவன்பட்டி செல்லும் பிரிவு ரோட்டில் ஆண்டிபட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் வாகன தனிக்கை செய்த போது ஆஜர் எதிரிகள் TN 60 U 3204 என்ற ஆட்டோவில் வந்தவர்களை பிடித்து விசாரித்து , கைது செய்த போது அவர்கள் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை எனது மற்றும் பாண்டி என்பவரின் முன்னிலையில் பதிவு செய்தார்கள். அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு சொத்துக்களை அத்தாட்சியில் 12.30

மணிக்கு எங்களது முன்னிலையில் கைப்பற்றினார்கள் என்றும், நானும் , பாண்டி என்பவரும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் சாட்சி கையொப்பம் செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற , அவர்களுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** – வாய்ப்பளித்தும், குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2025.07.21 15:24:04 +0530

Judicial Magistrate,
Andipatti.